மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்
2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17–ம் நாள் புதன்கிழமை
E.A 3/19
in
E.P.10/19
எ.ம.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: சிவசுப்பிரமணியன் | தேதி : 17.09.25 |
| வயது : | த/பெ : தங்கவேல் நாடார் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

**<u>17.09.25 முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

என் தந்தை 03.07.1997 ல் இறந்தார் என்பதற்கான இறப்பு சான்றின் உண்மை நகலினை தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ 17 ஆகும்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. என் தந்தையின் இறப்பு சான்றின் தாவா சொத்தின் கதவு எண் மற்றும் முகவரி காண்பிக்ககப்படவில்லை என்றால் சரிதான். அதனால் என் தந்தை தாவா சொத்தில் எந்த காலத்திலும் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை உயிரோடு இருந்த காலம் வரை அவரது பெயரில் தாவா சொத்திற்கு மின் இணைப்பு இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பிற்கு நாங்கள் எந்த காலமும் மின்கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. மின் கட்டணம் செலுத்தியதற்கான ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. என் அப்பா இருந்த காலம் வரை அவரது பெயரில் தாவா சொத்தில் உள்ள கதவு எண் 1/168 வீட்டிற்கு வரி ரசீது என் தந்தை பெயரில் செலுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. அதற்கான ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா உயிரோடு இருக்கும் வரை மங்களம் அம்மாள் பெயரில் இருந்த பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அவரது பெயரில் பட்டா இல்லை.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.17 20:02:55 +0530

தாவா சொத்தில் உள்ள வீட்டை தவிர மங்களம் அம்மாள் மற்றும் அவரது வாரிசுகளுக்கு வேறு வீடு இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு கீழ்புறம் சர்வே எண் 48/6 வீடு உள்ளது. சர்வே எண் 48/6 ன் பட்டா மற்றும் தீர்வை ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. நான் தற்போது தூத்துக்குடியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் எ.ம.சா.ஆ 16 ல் 1925 ம் ஆண்டு உயிலில் கண்ட நபர்கள் தான் உரிமையாளர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர் என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ 16 ல் 14 நபர்கள் காண்பிக்கப்பட்டுள்ளனர் என்றால் என்னையும் என் தம்பியையும் தவிர மற்றவர்கள் நீக்கப்பட வேண்டியவர்கள். அதற்கு நான் எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் இனிமேல்தான் கொடுக்கவேண்டும். இவ்வழக்கில் ஏற்கனவே ஒரு கொடி வழி ஜாபிதா தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. அந்த கொடி வழி ஜாபிதாவில் துரைப்பாண்டி நாடாரை நாராயண நாடாரின் அபிமான புத்திரராக காண்பித்தேன் என்றால் ஞாபகம் இல்லை. தற்போது அந்த தவறை சரி செய்ய எ.ம.சா.ஆ 14 கொடி வழி ஜாபிதாவை புதிதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4.எ.ம.சா.ஆ 14 கொடி வழி ஜாபிதாவில் நாராயண நாடாரின் அபிமான புத்திரராக துரைப்பாண்டி நாடாரை காண்பிக்க்வில்லை என்றால் சரிதான்.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.17 20:02:59 +0530